**STC 484/2020**

**PW1 – சிவப்பிரகாசம்** நாள் 01.08.2023.

**எதிரி ஆஜர்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன்ள ன்றால் - தையல் தொழில் மற்றும் இடம் வாங்கி விற்கும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு தமிழக அரசிடம் அங்கீகாரம் வாங்கியுள்ளேனா என்றால் - இல்லை. இடைத்தரகர் வேலை தான் செய்கிறேன். எனக்கு மாதம் என்ன வருமானம் என்றால் - ரூ.40 - 50 ஆயிரம் வாங்குவேன். எனக்கு ரூ.5,00,000/- வருமானத்திற்கு மேல் வந்தால் வருமான வரி செலுத்தவேண்டும் என்றால் - நான் கட்டுவது இல்லை. எனக்கு PAN கார்டு உள்ளதா என்றால் - உள்ளது. அதன் எண். GOBPS8171F என்றால் - சரிதான்.

2. ஆண்டுக்கு ரூ.5,00,000/-க்கு மேல் வருமானம் ஈட்டினால் ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடிமகனாக உள்ள அனைவரும் வருமான வரி செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். சில மாதங்கள் ரூ.10,000 - 20,000/- கூட வருமானம் வரலாம் என்றால் - சரிதான். அதனால் ஆண்டிற்கு ரூ.5,00,000/-த்திற்கு மேல் எனக்கு வருமானம் வருவதில்லை என்பதால் நான் வருமான வரி செலுத்துவது இல்லை என்றால் - சரிதான்.

3. ரூ.50,000/-த்திற்கு மேல் எந்வொரு பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் வங்கி மூலம் தான் செய்யவேண்டும் என்ற நடைமுறை உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது. ரூ.5,00,000/- என்பது சாதாரண தொகை இல்லை என்றால் - சரிதான். அந்த ரூ.5,00,000/- ஆதரவு ஆவணமாக எதையும் பெற்றுள்ளேனா என்றால் - காசோலை மட்டும் வாங்கிக்கொண்டேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நாளன்றே எதிரியிடமிருந்து காசோலையை அத்தாட்சிக்காக பெற்று வைத்துக்கொண்டேன்.

4. நீதிமன்றத்தில் காட்டப்படும் இவ்வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து மட்டும் வேறொரு மையினாலும் தொகை மற்ற விவரங்கள் வெறொரு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அவர் எழுதிக்கொடுத்தார். எந்தவொரு தொகை, தேதி மற்றும் எனது பெயர் குறிப்பிடப்பட்டு எதிரியினால் இந்த வழக்கு காசோலை வழங்கப்படவில்லை என்றால் - சரியல்ல.

5. மன்னார்குடியில் கோட்டூரில் கணேசன் ஏஜென்சீஸ் வைத்திருக்கும் கணேசன் மீதும் மற்றும் அவரது ஆட்கள் வீட்டிற்கு வந்தது தொடர்பாக ஒரு வழக்கு உள்ளது என்றும் அந்த வழக்கில் நான் எதிரியாக உள்ளேனா என்றால் - இல்லை. மேற்படி கணேசனை எனக்கு தெரியுமா என்றால் - தெரியும். அவர் எனக்கு பரிச்சயமான நபர்தான். எனது ஊர் கோட்டூர் என்றால் - சரிதான்.

(**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது**).